செய்தி குறிப்பு எண்.35 நாள்.28.2.2010

**சென்னை மருத்துவக் கல்லூரி 175–வது ஆண்டு விழா மற்றும் கல்லூரி புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை**

**சென்னை மருத்துவக் கல்லூரி 175–வது ஆண்டு விழா – கல்லூரி புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழா என்ற இந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைந்து, மிகுந்த உற்சாகத்தோடு நடைபெறுகின்ற இந்த விழாவிலே கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்கின்றேன்.**

**மகிழ்ச்சிக்குக் காரணம், உங்களையெல்லாம் சந்திப்பது. மனநிறைவுக்குக் காரணம், மருத்துவத் துறையிலே இன்னும் பல விரிவாக்கங்கள் நடைபெறவேண்டும் – அதற்கு ஒரு கட்டமாக, இன்றைக்கு இந்த விழா நடைபெறுகிறது. இந்த விழாவினுடைய அடிப்படையில் இன்னும் பல மருத்துவத் துறை விரிவாக்கங்கள் தமிழகத்தில் நடைபெற இது அடித்தளமாக இருக்கும் என்று இன்னொரு நம்பிக்கை. இந்த வகையிலேதான் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி இந்த விழாவிலே எனக்கு ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.**

**மருத்துவக் கல்லூரிக்கு 175–வது ஆண்டு விழா என்று சொல்லும்போது, இங்கே வாழ்த்துரைத்தவர்கள், தொகுத்துரைத்தவர்கள் – இவர்களெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல, இந்தக் கல்லூரியிலே 1912 ஆம் ஆண்டில் படித்து, பட்டம் பெற்று, டாக்டராக ஆனவர்தான் – இந்திய நாட்டின் முதல் பெண் டாக்டர் என்ற பெருமை பெற்ற டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி என்று எடுத்துரைத்தார்கள். அதை எடுத்துரைத்ததோடு நில்லாமல், திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்த அம்மையாருடைய புகழை மேலும் விரிவடையச் செய்ய – அந்த அம்மையாருடைய தொண்டினை மேலும் சிறப்புறச் செய்ய – நன்றி காட்டுகின்ற வகையில், ஒரு பெரிய திட்டம் – பேறு காலத்திலே மாத்திரமல்லாமல், கருவுற்றிருக்கிற காலத்திலேகூட, தமிழ்நாட்டுப் பெண்களுக்கு மாதம் 1000 ரூபாய் வீதம், ஆறு**

மாதங்களுக்கு 6 ஆயிரம் ரூபாயை அவர்களுக்குத் தருவது என்கிற ஒரு திட்டத்தை வகுத்து, அதை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்திற்கு நாங்கள் நன்றி உணர்வோடு வைத்திருக்கின்ற பெயரே – "டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டம்" என்பதாகும்.

அதைப்போலவேதான், கருவுற்று இருப்பவர்களுக்கு – அவர்களுடைய நலன்கள் பாதிக்காத அளவிற்கு 6 ஆயிரம் ரூபாய் தருவதைப்போல, அவர்கள் கருவுருவதற்குக் காரணமாக இருக்கின்ற திருமணங்கள் – அவர்கள் படித்த ஏழைப் பெண்களாக, நலிவுற்ற குடும்பத்தைச் சார்ந்த பெண்களாக இருப்பார்களேயானால், அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் திருமணச் செலவு இந்த அரசின் சார்பில் வழங்கப்படுகிறது. அதற்கும் சமுதாயப் புரட்சி செய்த ஒரு தாயின் பெயரைத்தான் வைத்திருக்கின்றோம். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயர் அந்தத் திட்டத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இந்த அரசு உழைத்தவர்களை, அனுபவசாலிகளை, பழம்பெரும் தியாகிகளை, திறமை வாய்ந்த மருத்துவர்களை, கல்வியாளர்களை, வல்லுநர்களைச் சிறப்பிக்கக்கூடிய அரசு என்பதற்கு உதாரணமாகத்தான் இதையெல்லாம் சொல்கின்றேன். இங்கே ஏறத்தாழ 40 பேர் வயதான மருத்துவர்கள் என்னிடத்திலே பதக்கங்களைப் பெறுவதற்கு வரும்போது – நானும், அவர்களும் சந்தித்த அந்தக் காலக்கட்டங்களையெல்லாம் சொன்னார்கள். "1972 ஆம் ஆண்டு ஒரு விழாவில் நீங்களும், நானும் சந்தித்தோமே, ஞாபகம் இருக்கிறதா" என்று கேட்டார்கள். "1975–ல் நாம் சந்தித்தோமே, ஞாபகம் இருக்கிறதா" என்று கேட்டார்கள். எனக்கு வியப்பு மேலிட்டது. அதே நேரத்திலே, என்னுடைய பெயரைப் பற்றிய பெருமையும், அதைப்பற்றிய ஒரு கித்தாப்பும் – பரவாயில்லை, இவர்களும், நாமும் ஒரே காலத்திலே தொண்டு புரிந்திருக்கின்றோம். இன்றைக்கு இவர்கள் நம்மை வாழ்த்தும்போதும், அவர்களுடைய வயதைக் குறிப்பிட்டு, நன்றியுணர்வோடு அந்த நட்புத் தன்மையைக் குறிப்பிட்டு, அவர்கள் எந்த அளவிற்கு நம்மோடு

பழகுகிறார்கள் என்பதை எண்ணும்போது, நான் உள்ளபடியே, – அவர்கள் ஒவ்வொருவரும் இங்கே வந்து என்னிடத்திலே, அந்தப் பதக்கத்தை அவர்களுடைய கழுத்திலே நான் அணிவித்தபோது, அந்த உணர்ச்சியை அவர்கள் எனக்கு ஏற்படுத்தினார்கள். அப்படிப்பட்ட அனுபவமிக்க ஆற்றல் உள்ள டாக்டர்கள் அவர்கள்.

டாக்டர்கள் என்றால், கத்தி எடுத்து, அறுவை சிகிச்சை செய்கின்றவர்கள் மாத்திரம்தான் டாக்டர்கள் என்று அல்ல. இங்கே வந்த 40 டாக்டர்களில், அந்த அறுவை சிகிச்சைக்கே இடமில்லாமல், வியாதிகளை குணப்படுத்தியவர்கள் உண்டு. என்னுடைய சொந்த அனுபவத்திலே சொல்கின்றேன். டாக்டர்களிடத்திலே எனக்கு அதிக அனுபவம் உண்டு. ஏனென்றால், நான் பிறந்தது முதல், பல டாக்டர்களைச் சந்திக்கின்ற, பல டாக்டர்களோடு அறிமுகமாகின்ற வாய்ப்பைப் பெற்றவன். அதனால், பல டாக்டர்களோடு எனக்குப் பழக்கமுண்டு. இங்கேயிருக்கிற டாக்டர்களில் யாரையாவது ஒருவரைக் குறிப்பிட்டால், மிச்சமிருக்கிற 39 பேர்களுக்கு, "நம்மையெல்லாம் குறிப்பிடாமல் விட்டுவிட்டாரே" என்று வருத்தம் ஏற்படும். அப்படி என்னிடத்திலே பரிசு பெற்ற, பதக்கம் பெற்ற அத்தனை டாக்டர்களுமே, இன்றைக்கு நான் உயிர் வாழ்வதற்குக் காரணமாக இருப்பவர்கள் என்பதை நான் நன்றி பெருக்கோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெறுவது, ஏற்கெனவே காராகிரகமாக இருந்த இடத்தில். மருத்துவக் கல்லூரி அமைத்து, அதைப் புகழ்பட இந்த உலகத்தார் அனைவரும் ஏற்றிப் போற்ற உருவாக்க வேண்டுமென்பதற்காக, அந்த இடத்திலேதான் – பழைய சிறைச்சாலை இருந்த இடத்தில் – அங்குள்ள இடத்தைப் பயன்படுத்திக் கொள்ள, இந்தக் கல்நாட்டு விழா நடைபெறுகிறது. சிறைச்சாலை புழலுக்கு மாற்றப்பட்டு விட்ட காரணத்தால், நான் அங்கே இருந்த இடத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று யோசித்தபோது, நம்முடைய டாக்டர் தணிகாசலம் அவர்கள்தான், இந்த யோசனையைச் சொன்னார்கள். "இங்கே

வேறு மருத்துவமனையெல்லாம் கட்டுவது என்று பலர் பேசுகிறார்கள். ஏதோ அங்காடி வைக்கலாம் என்று பலர் பேசுகிறார்கள். நான் ஒரு யோசனை சொல்கிறேன், தயவு செய்து கேட்பீர்களா?" என்று கேட்டார். "என்ன யோசனை, சொல்லுங்கள்" என்று கேட்டேன். ஏனென்றால், சென்ற ஆண்டு அவரிடத்திலே இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்று வந்தேன். அந்த நேரத்தில் அவருடைய யோசனையைக் கேட்காவிட்டால், சிகிச்சை அளிப்பவருடைய கோபத்திற்கு ஆளாக நேரிடும் (சிரிப்பு) என்று, "என்ன யோசனையானாலும் சொல்லுங்கள், கேட்கிறேன்" என்றேன். அப்போதுதான், "இதை மருத்துவக் கல்லூரியாக ஆக்குவதற்கு திட்டமிட்டு, அதை நிறைவேற்றுங்கள்" என்று அவர் என்னிடத்திலே சொன்னார். அது இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது. ஆகவே, டாக்டர் தணிகாசலம் அவர்களுடைய ஆசை இன்றைக்கு நிறைவு செய்யப்படுகிறது என்று பொருள். (கைதட்டல்)

மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், எனக்குப் பல நினைவுகள் வருகின்றன. அதை யாரும் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நான் கொஞ்சம் உணர்ச்சி வயப்படுகிறேன். இதே மருத்துவக் கல்லூரியில் அறிஞர் அண்ணா அவர்களை எப்படி நடத்தினார்கள்? இன்றல்ல – 1967–68–ல் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், பேருந்து தொழிலாளர்களுக்கும் நள்ளிரவில் ஒரு மோதல் ஏற்பட்டு – அந்த மோதல் வெடித்து சென்னை மாநகரத்து தெருவெல்லாம் ரத்தம் சிந்து கின்ற அளவிற்கு கடுமையான போர் அன்றைக்கு நடைபெற்ற போது – அண்ணா அவர்கள் என்னை அழைத்துத் தான் அந்த இடத்திலே போய் சமாதானம் செய்து வை என்று ஆணையிட்டார்கள். நானும் மறைந்த நண்பர்கள் ஏ. கோவிந்தசாமி அவர்களும், ராஜாராம் அவர்களும், ப.உ. சண்முகம் அவர்களும், என்.வி. நடராசன் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்று சமாதாயம் செய்கின்ற முயற்சியிலே ஈடுபட்டோம். பயன் ஏற்பட வில்லை. மறுநாள் காலையில் நானே சமாதானத்திற்கு வருகிறேன் என்று சொல்லி

முதலமைச்சர் அண்ணா அவர்களே மருத்துவக் கல்லூரி வளாகத்திற்கு வந்து சமாதானம் செய்ய இருதரப்பினரையும் அழைத்துப் பேசிய போது – அண்ணா அவர்களுக்கு நீண்ட நேரம் மாணவர்களுடன் பேசிய காரணத்தால் திடீரென தொண்டை வறண்டு விட்டது. யாரும் தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. தண்ணீர் வேண்டுமென்று கட்டை விரலைக் காட்டினார். ஒரு மருத்துவக் கல்லூரி மாணவர் ஓடிப் போய் தண்ணீர் கொண்டு வந்தார். அப்போது இன்னொரு மாணவர், அந்தத் தண்ணீரை தட்டி விட்டார். அதைப் பார்த்த அண்ணா பொறுமையோடு இருந்தார். அந்தப் பொறுமை எங்களுக்கெல்லாம் எவ்வளவு விழிப்புணர்வை ஏற்படுத்தியது – அந்தப் பொறுமையைத் தான் இன்றைக்கும் என் தலைமையிலான இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது – அண்ணா காட்டிய அந்தப் பொறுமை – இதை நான் சொல்கின்ற காரணத்தால் – அண்ணாவுக்கே அந்தக் கதி என்றால் உனக்கென்ன என்று நான் வரும்போதும் செய்து காட்டாதீர்கள் என்று மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அண்ணாவுக்கு நடந்ததைப் பார்த்து விட்டு, அப்படி ஏதாவது சமாதானம் பேசுவதென்றால் நான் வரும்போதே கூஜா ஒன்றில் தண்ணீரைக் கொண்டு வந்து விடுவேன், நான் இங்கே வந்து தண்ணீர் கேட்டு, அதைத் தட்டி விடுகின்ற அளவிற்கு நடந்து கொள்ள மாட்டேன், ஏனென்றால் நான் எப்போதும் முன் ஜாக்கிரதையாக இருப்பவன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், மாணவர்கள் அதுவும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எந்த அளவிற்கு இதயம் பெற்றவர்களாக இருக்க வேண்டும், அந்த இருதயத்திலே ஈரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் – அவர்கள் வீரம் கொண்டவர்களாகக் கூட இருக்கலாம், ஆனால் எவ்வளவு பெரிய வீரத்திற்கும் சிறப்பு அளிப்பது, அவர்கள் நெஞ்சிலே ஊறுகின்ற ஈரம் தான் என்பதை மறந்து விடாமல் – நெஞ்சிலே உங்களுக்கு ஈரம் ஊறுகின்ற காரணத்தினாலே தான் நீங்கள் எவ்வளவு கொடுமையான வியாதிகளையும் – எவ்வளவு பார்க்கத் தக்க, முடியாத, இயலாத மோசமான வியாதிகளையும் நீங்கள் குணப்படுத்த – ஒரு நோயாளியின் அருகே செல்கிறீர்கள் என்றால், நெஞ்சிலே இருக்கின்ற ஈரமும் அந்த ஈரத்தின்

காரணமாக ஏற்படுகின்ற கருணையும், அந்தக் கருணையின் காரணமாக ஏற்படுகின்ற இதயக் கசிவும் தான் இதற்கெல்லாம் காரணம் என்பதை நீங்கள் உணர்ந்து – இன்று நேற்றல்ல – காலம் காலமாக மருத்துவத் துறை மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்ற பயிற்சி எது என்பதை உணர்ந்து அந்தப் பயிற்சியையே வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டு மனிதனை வாழ வைக்க வேண்டும். அதற்காகத் தான் நாம் இந்தத் தொழிலை இன்றைக்கு கற்றிருக்கிறோம், இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறோம் என்ற எண்ணம் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு வந்தாக வேண்டும்.

நான் ஏதோ குறிப்பாக சென்னையிலே உள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் சொல்கிறேன் என்று யாரும் வருத்தப்பட வேண்டாம். சென்னையிலே உள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக் காக இந்தியா முழுமையும் உள்ள மாணவர்களை முன்னிட்டு சென்னையிலே உள்ள மாணவர்களைச் சுட்டிக்காட்டி சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. ஏனென்றால் இந்தத் துறையைத் தான், குறிப்பாக மருத்துவத் துறையைத் தான், இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற கோடானு கோடி மக்கள் நம்பியிருக்கிறார்கள். இந்தத் துறைக்குத் தான் இந்தியப் பேரரசு ஆனாலும் அதாவது மத்திய அரசானாலும், மாநில அரசுகள் ஆனாலும் நிரம்ப செலவழித்துக் கொண்டிருக்கின்றன. அப்படி செலவு செய்யப்படுவதெல்லாம் மனிதாபிமான உணர்வோடு செய்யப் படுகிறது. அந்த மனிதாபிமான உணர்வை நாமும் பெற்று –மனிதர்களைக் காப்பாற்ற – மனிதர்களுடைய நோயைத் தீர்க்க நாம் நம்முடைய கடமையைச் செய்தாக வேண்டும் என்ற உணர்வைப் பெற வேண்டுமென்று தான் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த ஆட்சியின் சார்பாக 108 என்ற ஒரு அவசர சேவை வண்டி – அதைக் கண்டாலே ஏதோ கடவுளைக் கண்டதைப் போல சாதாரண கிராமத்து மக்கள் தங்களுடைய மகிழ்ச்சியை தெரிவிக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாம் இன்றைக்கு நிறைவேற்றி வருகிறோம்.

அதைப் போலவே காப்பீட்டுத் திட்டம் – அந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக தம்பி பன்னீர்செல்வம் இங்கே எடுத்துச் சொன்ன அந்த விவரப்படி பல்லாயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் அதை நம்பி மக்கள் இன்றைக்கு தங்களை அதிலே ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இதை ஏன் செய்கிறோம் ? என்னக் காரியத்திற்காகச் செய்கிறோம் ? பரலோகத்திற்குச் சென்றால் புண்ணியம் பெறலாம், சொர்க்கம் பெறலாம், வைகுண்டம் பெறலாம், மோட்சம் பெறலாம் என்பதற்காகவா ? அல்ல. பரலோகத்தில் இல்லை சொர்க்கமும், மோட்சமும். இங்கே தான் இருக்கிறது. இந்த லோகத்திலே தான் இருக் கிறது. இந்த லோகத்திலே இருக்கின்ற அந்தச் சொர்க்கத்தை, அந்த மோட்சத்தை மக்களுக்கு நற்காரியங்களைச் செய்வதின் மூலமாக நாம் பெறலாம். அந்த அருமையான வாய்ப்பை மருத்துவக் கல்லூரியும், மருத்துவக் கல்வியும் வழங்கியிருக்கிறது. அப்படி வழங்கப்பட்ட வாய்ப்பை வீணாக்காமல் நம்முடைய கடமையைச் செய்ய இந்த மருத்துவ துறையிலே நாம் பெற்ற பயிற்சியைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விழாவைப் பெரிதாக நடத்துவது பெரிதல்ல. கோடானு கோடி ரூபாய் செலவழித்து கட்டிடங்களைக் கட்டுவது பெரிதல்ல. இருந்து பயின்று செல்கிற மாணவர்கள் – பயிற்சி பெற்றுச் செல்கிற மாணவர்கள் – மனிதர்களை வாழ வைப்பதற்காகச் செல்கிறோம், கையாலாகாதவர்களை, வழியற்றவர்களைக் காப்பாற்றுவதற்காகச் செல்கிறோம், ஆதரவற்றவர்களை அரவணைப்பதற்காகச் செல்கிறோம், அவர்களுக்கு நாம் அளிப்பது சிகிச்சை அல்ல, அவர்களுக்கு நாம் தருவது வாழ்வு என்ற எண்ணத்தோடு உங்களுடைய பணிகளைச் செய்வீர்களேயானால் – உங்கள் வழிகளை வகுத்துக் கொள்வீர்களேயானால் இன்று ஏற்படுகின்ற மகிழ்ச்சியை விட, அது எங்களுக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை உங்களுடைய காலடியிலே சமர்ப்பித்து அந்தக் கருணையை நான் உங்களிடமிருந்து வேண்டி நிற்கிறேன் என்று கூறி – என்னிடம் ஒரு வேண்டுகோள் தரப்பட்டிருக்கிறது. பொதுவாக அமைச்சர்கள்

செல்லும் இடத்தில் எல்லாம் வேண்டுகோள் இல்லாவிட்டால் அந்த விழா நிறைவு பெறாது. அந்த வகையில் சென்னை மருத்துவக் கல்லூரியின் பெருமைக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் "மாநாட்டு அரங்கம்" ஒன்று அமைக்க வேண்டுமென்றும் – சென்னை மருத்துவக் கல்லூரி மாணவ மாணவியரின் நலன்களுக்காக அதி நவீன வசதிகளோடு புதிய மாணவர் இல்லமும் (கைதட்டல்) கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். பட்ஜெட் நேரம் – பட்ஜெட் நேரத்தில் அதற்கு முன்பு அறிவிப்புகள் செய்யக் கூடாது – அதனால் பட்ஜெட்டில் செய்வேன் என்றும் அர்த்தமல்ல – இல்லை என்றும் சொல்ல முடியாது. எனவே எதிர்பாருங்கள் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். (கைதட்டல்)

*************

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.